**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.68/2023 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.1 |
| பெயர் | தங்கராஜ் | கிராமம் | |
| தந்தை பெயர் | மாணிக்கவேலர் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Tmt. Kalaiselvi, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 05.12.2025

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

2வது எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் வீரியான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரி கமலத்தை தெரியும். இந்த வழக்கின் 1வது எதிரி வீரமணியை தெரியும்.

நான் நடந்து போகும் போது தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். எனக்கு நெஞ்சின் மேல் பகுதியில் காயம் ஏற்பட்டது. என் மனைவி என்னுடன் சேர்ந்து நடந்து வந்தார். அவரும் தடுமாறி கிழே விழுந்துவிட்டார். அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது தங்கை லட்சுமியும் தடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. இந்த வழக்கு பற்றி எனக்கு வேறொன்றும் தெரியாது.

புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1. இன்றிலிருந்து நான்கு வருடங்களுக்கு முன்பு மாலை 7.30 மணியளவில் என் வீட்டில் இருந்து 15 அடி தூரத்தில் நடந்துவரும் போது கீழே விழுந்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால்

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

நான் நடந்து செல்வதற்கு எனது வீட்டில் இருந்து 15 அடி தூரத்தில் உள்ள பாதை என் வீட்டிற்கு செல்லும் பாதை ஆகும். அந்த ஒரு பாதை தான் நான் வீட்டிற்கு செல்ல உள்ளது. அந்த பாதை சம்மந்தமாக தான் எனக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை என்று சொன்னால் சரிதான். அந்த பாதையை எதிரிகள் பைக்கை வைத்து மறைத்ததால் தான் பிரச்சனை ஏற்பட்டது. அதன் பிறகு நாங்கள் வீட்டிற்கு செல்லும் பாதையை எதிரிகள் தடுக்கவில்லை. அதற்கு பிறகு பஞ்சாயத்து பேசி சமாதானம் ஆகிவிட்டோம். போலிசாரிடம் 1வது எதிரி என் மனைவியை மண்வெட்டியின் பின்புறத்தால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதற்கு 2வது எதிரி என்னை அடித்து கீழே தள்ளி என் நெஞ்சின் மேற்பகுதியில் காயம் ஏற்படுத்தியதற்கு என் தங்கை லட்சுமிக்கு எதிரிகள் இருவரும் அடித்து காயப்படுத்தியதற்கும் தான் நான் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அநத் சம்பவம் 23.02.2022 தேதியில் இரவு 9.30 மணியளவில் 1வது எதிரியும் நாங்கள் நடந்து செல்லும் பாதையின் குறுக்கே மோட்டார் பைக்கை வைத்து மறித்ததால் அதை நாங்கள் கேட்டதால் இந்த வழக்கின் எதிரிகள் எங்களை தாக்கியதாக புகார் வாக்குமூலமும் போலிசாரிடம் கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு பிறகு நீதிமன்றத்திற்கு வெளியே நாங்கள் பஞ்சாயத்து பேசி சமாதனம் செய்து கொண்டு எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– தங்கராஜ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

## DEPOSITION OF WITNESS

### ( Chapter XXIII Code of Criminal Procedure )

--

### IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.68/2023 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.2 |
| பெயர் | தமிழ்செல்வி | கிராமம் | |
| கணவர் பெயர் | தங்கராஜ் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Tmt. Kalaiselvi, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 05.12.2025

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified through his Aadhar card.

2வது எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் வீரியான் பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் கூலி வேலை செய்து வருகிறார். எனக்கு ஆஜர் எதிரி கமலத்தை தெரியும். இந்த வழக்கின் 1வது எதிரி வீரமணியை தெரியும்.

நான் எனது கணவருடன் சேர்ந்து நடந்து செல்லும்போது தடுமாறி கிழே விழுந்ததில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது கணவருக்கு நெஞ்சின் மேல் பகுதியில் காயம் ஏற்பட்டது. எனது கணவரின் தங்கை லட்சுமியும் தடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. இந்த வழக்கு பற்றி எனக்கு வேறொன்றும் தெரியாது.

இன்றிலிருந்து நான்கு வருடங்களுக்கு முன்பு மாலை 7.30 மணியளவில் என் வீட்டில் இருந்து 15 அடி தூரத்தில் நடந்துவரும் போது கீழே விழுந்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால்

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

நான் நடந்து செல்வதற்கு எனது வீட்டில் இருந்து 15 அடி தூரத்தில் உள்ள பாதை என் வீட்டிற்கு செல்லும் பாதை ஆகும். அந்த ஒரு பாதை தான் நான் வீட்டிற்கு செல்ல உள்ளது. அந்த பாதை சம்மந்தமாக தான் எங்களுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை என்று சொன்னால் சரிதான். அந்த பாதையை எதிரிகள் பைக்கை வைத்து மறைத்ததால் தான் பிரச்சனை ஏற்பட்டது. அதன் பிறகு நாங்கள் வீட்டிற்கு செல்லும் பாதையை எதிரிகள் தடுக்கவில்லை. அதற்கு பிறகு பஞ்சாயத்து பேசி சமாதானம் ஆகிவிட்டோம். போலிசாரிடம் 1வது எதிரி என்னை மண்வெட்டியின் பின்புறத்தால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், 2வது எதிரி எனது கணவரை அடித்து கீழே தள்ளி அவர் நெஞ்சின் மேற்பகுதியில் காயம் ஏற்படுத்தியதாகவும், எனது கணவரின் தங்கை லட்சுமியை எதிரிகள் இருவரும் அடித்து காயப்படுத்தியதாகவும் தான் என் கணவர் தான் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த சம்பவம் 23.02.2022 தேதியில் இரவு 9.30 மணியளவில் 1வது எதிரி நாங்கள் நடந்து செல்லும் பாதையின் குறுக்கே மோட்டார் பைக்கை வைத்து மறித்ததால், அதை நாங்கள் கேட்டதால் இந்த வழக்கின் எதிரிகள் எங்களை தாக்கியதாக புகார் வாக்குமூலமும் போலிசாரிடம் கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு பிறகு நீதிமன்றத்திற்கு வெளியே நாங்கள் பஞ்சாயத்து பேசி சமாதனம் செய்து கொண்டு எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/- தமிழ்செல்வி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | SC No.68/2023 | அரசுத்தரப்பு P.W.3 சாட்சி |
| பெயர் | லட்சுமி | கிராமம் |
| தந்தை பெயர் | மாணிக்கவேலர் | வட்டம் |
| வயது | | மாவட்டம் |

Solemnly affirmed by Tmt. Kalaiselvi, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 05.12.2025

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified through his Aadhar card.

2வது எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் வீரியான் பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரி கமலத்தை தெரியும். இந்த வழக்கின் புகார்தாரர் தங்கராஜ் எனது உடன்பிறந்த சகோதரர். இந்த வழக்கின் 1வது எதிரி வீரமணியை தெரியும்.

நான் எனது அண்ணனுடன் சேர்ந்து நடந்து செல்லும்போது தடுமாறி கிழே விழுந்ததில் எனக்கு காலில் காயம் ஏற்பட்டது. எனது அண்ணனுக்கு நெஞ்சின் மேல் பகுதியில் காயம் ஏற்பட்டது. எனது அண்ணன் மனைவிக்கு தலையில் அடிப்பட்டு காயம் ஏற்பட்டது. இந்த வழக்கு பற்றி எனக்கு வேறொன்றும் தெரியாது.

இன்றிலிருந்து நான்கு வருடங்களுக்கு முன்பு மாலை 7.30 மணியளவில் எனது அண்ணன் வீட்டில் இருந்து 15 அடி தூரத்தில் நடந்துவரும் போது கீழே விழுந்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி

வழங்கப்பட்டது.)

நான் நடந்து செல்வதற்கு எனது அண்ணன் வீட்டில் இருந்து 15 அடி தூரத்தில் உள்ள பாதை எனது அண்ணன் வீட்டிற்கு செல்லும் பாதை ஆகும். அந்த ஒரு பாதை தான் நாங்கள் வீட்டிற்கு செல்ல உள்ளது. அந்த பாதை சம்மந்தமாக தான் எங்களுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை என்று சொன்னால் சரிதான். அந்த பாதையை எதிரிகள் பைக்கை வைத்து மறைத்ததால் தான் பிரச்சனை ஏற்பட்டது. அதன் பிறகு நாங்கள் வீட்டிற்கு செல்லும் பாதையை எதிரிகள் தடுக்கவில்லை. அதற்கு பிறகு பஞ்சாயத்து பேசி சமாதானம் ஆகிவிட்டோம். போலிசாரிடம் 1வது எதிரி எனது அண்ணன் மனைவியை மண்வெட்டியின் பின்புறத்தால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், 2வது எதிரி எனது அண்ணனை அடித்து கீழே தள்ளி அவர் நெஞ்சின் மேற்பகுதியில் காயம் ஏற்படுத்தியதாகவும், என்னை எதிரிகள் இருவரும் அடித்து காயப்படுத்தியதாகவும் தான் எனது அண்ணன் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த சம்பவம் 23.02.2022 தேதியில் இரவு 9.30 மணியளவில் 1வது எதிரி நாங்கள் நடந்து செல்லும் பாதையின் குறுக்கே மோட்டார் பைக்கை வைத்து மறித்ததால், அதை நாங்கள் கேட்டதால் இந்த வழக்கின் எதிரிகள் எங்களை தாக்கியதாக புகார் வாக்குமூலமும் போலிசாரிடம் கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு பிறகு நீதிமன்றத்திற்கு வெளியே நாங்கள் பஞ்சாயத்து பேசி சமாதனம் செய்து கொண்டு எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/- லட்சுமி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.